

# ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான
# ஆறு சிசு பராமரிப்பு சிறப்பு ஊர்திகளை
# மாண்புமிகு தமிழக முதல்வர்
# **டாக்டர் கலைஞர்** அவர்களிடம்
# யுனிசெஃப் நிறுவனம் வழங்குதல்

இடம் : தலைமைச் செயலகம், சென்னை-9.

நாள் : 18.7.2007, புதன்கிழமை



தமிழ்நாட்டில் தற்போதைய கணக்கெடுப்பின்படி, ஒவ்வொரு ஆண்டும் பிறக்கின்ற ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் 31 பச்சிளங் குழந்தைகள் மூச்சுத் திணறல், தொற்றுநோய்கள், குறைப்பிரசவங்கள், எடை குறைவு போன்ற காரணங்களால் இறந்து போகின்றன. அகில இந்திய அளவில் சிசு மரண விகிதம் 58 ஆக உள்ளது.

நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், செயல் படுத்தப்பட்டு வரும் பல நலத் திட்டங்களின் வாயிலாக தமிழக மக்களின் அன்றாட மருத்துவத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மிக அதி நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு தரமான சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் பச்சிளங்குழந்தைகளில் யாருக்கேனும் உடற்பிரச்சினைகள் அதிகமாகி உயிருக்குப் போராடும் நேரங்களில், சிறப்பு சிகிச்சைகளை மேற்கொள்ளவும், சிசுவின் உயிர்காக்கவும், மாவட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. மேல் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய பச்சிளங் குழந்தைகளை உயர் மருத்துவமனைகளுக்கு கொண்டு சேர்ப்பதில் தாமதம்



ஏற்படுதலாலும், எடுத்துச் செல்லப்படும் வாகனங்களில் அச்சிசுக்களின் உடல் நிலையை சீராக வைத்திருக்கும் வசதிகள் இல்லாமையாலும் உயர் மருத்துவ சிகிச்சை மையங்களை அடையு முன்னர் பல சிசுக்கள் மடிந்துவிடுகின்றன.

அவசர சிகிச்சைகள் தேவைப்படும் பிறந்த பச்சிளங் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த விரைவான நவீன உயிர்காக்கும் வசதிகள் கிடைக்கும்படியான நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டவையே நடமாடும் பச்சிளங் குழந்தை தீவிர பராமரிப்பு ஊர்திகள். உயர் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படும் பச்சிளங் குழந்தைகளுக்கு பயணத்தின் போது ஏற்படும் கடுமையான உடற் பிரச்சினைகளை சரி செய்து, உயிர்காக்கும் வசதிகள் நிறைந்தவையாக இந்நடமாடும் அவசர ஊர்திகள் அமைக்கப்பட்டுள்ளன.

**இவ்வாகனங்களில் அமையப் பெற்ற**
***அவசர சிகிச்சைக்கான சாதனங்களும் நவீன வசதிகளும்***

1. நோயுற்ற பச்சிளங் குழந்தையை உயர் சிகிச்சை நிலையம் கொண்டு சேர்க்கும் வரை அக்குழந்தையை கதகதப்பாக வைத்திருக்கும் கருவி மற்றும் பிராணவாயு தரும் கருவி.
2. பல்ஸ் ஆக்ஸி மீட்டர் – இரத்தத்திலுள்ள பிராண வாயுவின் அளவுகளை கண்காணிக்கும் கருவி
3. குழந்தைக்கு செயற்கை சுவாசம் அளிக்கும் கருவி (வெண்டிலேட்டர்)
4. திரவ மருந்தேற்றும் கருவி.
5. இரத்த அழுத்தமானி.
6. தொண்டை பரிசோதனைக் கருவி
7. சளி உறிஞ்சும் கருவி

தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவிருக்கும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு உயர் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக மிக உயரிய நோக்குடன் ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான 6 வாகனங்களை யுனிசெஃப் நிறுவனம் கடலூர், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் உபயோகத்திற்கு. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **டாக்டர் கலைஞர்** அவர்களிடம் 18.7.2007 ஆம் நாள் யுனிசெஃப் நிறுவன உயர் அலுவலர்கள் ஒப்படைக்கின்றனர்.




இச்சிறப்பு சிசு பராமரிப்பு அவசர ஊர்திகளின் சேவைகளை செம்மையுடன் உடனே மேற்கொள்ளும் வகையில், நான்கு பயிற்சி பெற்ற செவிலியர்களும், நான்கு ஊர்தி ஓட்டுநர்களும் ஒவ்வொரு வாகனத்திற்கும் பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

- மூன்று மாவட்டங்களிலுள்ள பொது மக்கள் இந்த அவசர ஊர்திகளைப் பயன்படுத்திக் கொள்ள கட்டணமில்லாத அவசர தொலைபேசி எண் 1056–ஐ தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.
- இதற்கென 24 மணி நேர கட்டுப்பாட்டு அறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஏழைக் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இந்த அவசர ஊர்திகளை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

"யுனிசெஃப் நிறுவனம்" செய்து கொடுத்துள்ள இது போன்ற வசதிகளை, தமிழகத்தின் மூலை முடுக்குகளில் அமைந்துள்ள கிராமப்புறங்களிலும் இலவசமாக ஏற்படுத்தித் தர முன்வரும் தொழிலதிபர்களையும், தயாள சிந்தனை மிகக் கொண்டவர்களையும் இத்திட்டங்களில் பயன்படுத்தி இன்னும் நூற்றுக்கணக்கான அவசர ஊர்திகளை தனியார் பங்கேற்புடன் செயல்படுத்த தமிழக அரசு ஊக்குவிக்கும்.

## சிசு பராமரிப்பு சிறப்பு ஊர்தி




## ஊர்தியின் உட்புறத்தோற்றம்



## ஊர்தியினுள் குழந்தையை கதகதப்பாக வைக்கப்பயன்படும் இன்குபேட்டர் கருவி



## குழந்தையை கொண்டு செல்வதற்கு முன் நாம் செய்ய வேண்டியவை



எந்த மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு செல்கிறோமோ அந்த மருத்துவமனையின் மருத்துவருக்கு குழந்தையின் நிலையை பற்றி முன்கூட்டியே சொல்ல வேண்டும்.

குழந்தையின் வெப்ப நிலையை பரிசோதிக்க வேண்டும்.

- குழந்தையின் மூச்சுவிடுதலை கண்காணிக்க வேண்டும்.
- குழந்தை மெதுவாக மூச்சு விட்டாலோ அல்லது மூச்சுவிட சிரமப்பட்டாலோ, மெதுவாக குழந்தையின் கால்களை தட்ட வேண்டும்: குழந்தையின் கழுத்தை நேராக வைத்தல் வேண்டும்.
- ஈரமான துணிகளை மாற்றிவிட வேண்டும்.
- உலர்ந்த துணிகளை போர்த்தி குழந்தைகளை கதகதப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.
- தலைக்கு குல்லா போட வேண்டும் குழந்தையைக் கொண்டு செல்லும்போது குழந்தை அழுதால் நேரடியாகவோ, பாலாடை மூலமாகவோ கவனமாக பால் கொடுக்க வேண்டும்.

unicef

# *பத்திரிக்கைச் செய்திக் குறிப்பு*

**தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களில், தாய்மார்கள் மற்றும் பச்சிளங் குழந்தைகளின் உயிர்காக்கும் அவசர மேல் சிகிச்சைக்கென உயர் வசதி மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லும் ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான ஆறு சிசு பராமரிப்பு சிறப்பு ஊர்திகளை யுனிசெஃப் நிறுவனம் தமிழக அரசுக்கு வழங்குதல்.**

*************

தமிழ்நாட்டில் தற்போதைய கணக்கெடுப்பின்படி, ஒவ்வொரு ஆண்டும் பிறக்கின்ற ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் 31 பச்சிளங் குழந்தைகள் மூச்சுத்திணறல், தொற்றுநோய்கள், குறைப்பிரசவங்கள், எடை குறைவு போன்ற காரணங்களால் இறந்து போகின்றன. அகில இந்திய அளவில் சிசு மரணவிகிதம் 58 ஆக உள்ளது.

நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர்.கலைஞர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களின் வாயிலாக தமிழக மக்களின் அன்றாட மருத்துவத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மிக அதி நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு தரமான சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

கிராமப்புறங்களில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் பச்சிளங் குழந்தைகளில் யாருக்கேனும் உடற்பிரச்சினைகள் அதிகமாகி உயிருக்குப் போராடும் நேரங்களில், சிறப்பு சிகிச்சைகளை மேற்கொள்ளவும், சிசுவின் உயிர்காக்கவும், மாவட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றன. மேல் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய பச்சிளங் குழந்தைகளை உயர் மருத்துவமனைகளுக்கு கொண்டு சேர்ப்பதில் தாமதம் ஏற்படுவதாலும், எடுத்துச் செல்லப்படும் வாகனங்களில் அச்சிசுக்களின் உடல் நிலையை சீராக வைத்திருக்கும் வசதிகள் இல்லாமையாலும் உயர் மருத்துவ சிகிச்சை மையங்களை அடையு முன்னர் பல சிசுக்கள் மடிந்துவிடுகின்றன.

அவசர சிகிச்சைகள் தேவைப்படும் பிறந்த பச்சிளங் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த விரைவான நவீன உயிர்காக்கும் வசதிகள் கிடைக்கும்படியான நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டவையே நடமாடும் பச்சிளங் குழந்தை தீவிர பராமரிப்பு ஊர்திகள். உயர் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படும் பச்சிளங் குழந்தைகளுக்கு பயணத்தின் போது ஏற்படும் கடுமையான உடற்பிரச்சினைகளை சரி செய்து, உயிர்காக்கும் வசதிகள் நிறைந்தவையாக இந்நடமாடும் அவசர ஊர்திகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாகனங்களில் அமையப் பெற்ற அவசர சிகிச்சைக்கான சாதனங்களும் நவீன வசதிகளும்:

1. நோயுற்ற பச்சிளங் குழந்தையை மாற்று இடம் கொண்டு சேர்க்கும் வரை அக்குழந்தையை கதகதப்பாக வைத்திருக்கும் கருவி மற்றும் பிராணவாயு தரும் கருவி.
2. பல்ஸ்–ஆக்ஸிமீட்டர் – இரத்தத்திலுள்ள பிராணவாயுவின் அளவுகளை கண்காணிக்கும் கருவி.
3. குழந்தைக்கு செயற்கை சுவாச கருவி (வெண்டிலேட்டர்)
4. திரவ மருந்தேற்றும் கருவி.
5. இரத்த அழுத்தமானி.
6. தொண்டை பரிசோதனைக் கருவி
7. சளி உறிஞ்சும் கருவி

தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவிருக்கும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு உயர் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக மிக உயரிய நோக்குடன் ரூபாய் ஒரு கோடி மதிப்பிலான ஆறு வாகனங்களை <u>யுனிசெஃப் நிறுவனம்</u> கடலூர், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களின் உபயோகத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர்.கலைஞர் அவர்களிடம் 18.7.2007 ஆம் நாள் யுனிசெஃப் நிறுவன உயர் அலுவலர்கள் ஒப்படைக்கின்றனர் .

இச்சிசு பராமரிப்பு அவசர ஊர்திகளின் சேவைகளை செம்மையுடன் உடனே மேற்கொள்ளும் வகையில் நான்கு பயிற்சி பெற்ற செவிலியர்களும், நான்கு ஓட்டுநர்களும் ஒவ்வொரு வாகனத்திற்கும் பணியில் அமர்த்தப்படுகின்றனர்.

- மூன்று மாவட்டங்களிலுள்ள பொதுமக்கள் இந்த அவசர ஊர்திகளைப் பயன்படுத்திக் கொள்ள கட்டணமில்லாத 24 மணி நேர அவசர தொலைபேசி எண்.1056–ஐ தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.
- இதற்கென ஒரு கட்டுப்பாட்டு அறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஏழைக் கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இந்த அவசர ஊர்திகளை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

யுனிசெஃப் நிறுவனம் செய்து கொடுத்துள்ள இது போன்ற வசதிகளை, தமிழகத்தின் மூலை முடுக்குகளில் அமைந்துள்ள கிராமப்புறங்களிலும் ஏற்படுத்தித் தர முன்வரும் தொழிலதிபர்களையும், தயாள சிந்தனை மிகக் கொண்டவர்களையும் இத்திட்டங்களில் பயன்படுத்தி இன்னும் நூற்றுக்கணக்கான அவசர ஊர்திகளை தனியார் பங்கேற்புடன் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.